உ

சிவமயம்



யாழ்ப்பாணம் சித்தன்கேணி

உயர் சைவ வேளாள குலதிலகர்

அமரர் சங்கரப்பிள்ளை

விசுவலிங்கம் நடராசா

அவர்களின்

# நினைவு மலர்

08-07-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரு விசுவலிங்கம் நடராசா அவர்கள்

மலர்வு: 19-11-1904 உதிர்வு: 08-06-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக்கொண்ட

# சங்கரப்பிள்ளை விசுவலிங்கம் நடராசா அவர்களின்

# நினைவு மலர்

---

உற்றார் ஆருளரோ உயிர்கொண்டு போம்பொழுது குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு உற்றார் ஆருளரோ.

தமிழ் மறை: தக்கம் போற்கேடும் உளதாம் சாக்காடும்
வித்தகற் கல்லாலரிது

தோற்றம்: **19-11-1904** மறைவு: **08-06-1986**

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று"

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"

என ஒளவையார் கூறிய அருள்மொழி நம்பிறவியின் பயனை உணர்த்துவதாக அமைந்துள்ளது. மக்கட்பிறப்பை எடுத்தலன்றி அப் பிறப்பின் பயனை அறிந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ் வதிற்றான் வெற்றி தங்கியுள்ளது. இவ் வெற்றிக்குரியவராய்த் திகழ்ந்தோரில் ஒருவராக விளங்குபவரே நம் நினைவுக்குரிய அமரர் ச. வி. நடராசா அவர்கள்.

## தோற்றமும் இளமையும்

சித்தன்கேணியில் உத்தம சைவத் தலைவராம் திரு. சங்கரப் பிள்ளை விசுவலிங்கம் என்னும் பெரியார் வாழ்ந்து வந்தார். இவர் தமது வாழ்க்கைத் துணைவியார் திருமதி தங்கம்மா அவர்கள் பத் தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக வாழ்ந்து வந்தார். திரு. விசுவலிங்கம் அவர்கள் சைவ ஆசாரசீலராகவும், சிறந்த அறிஞராகவும் விளங்கி ஞர். இதனல் இவ்வூர் பெருங்குடிமக்கள் இவர் மீது தனி அன்பு பூண்டிருந்தார்கள் என்று கூறல் மிகையாகாது. சான்றோர் வழி நின்று இல்லறம் நடாத்தும் நாளில் மூத்த புதல்வராக திரு. நடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சோபகிருது ஆண்டு கார்த்திகைத் திங்கள் 5ம் நாள் ரேவதி நட்சத்திரம் கூடிய சுபவேளையில் பிறந்தார். (1904 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் பத்தொன்பதாம் நாளில்) நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் காலை அமரர் செல்லம்மாவையும், திருமதி இரத்தினம்மாவையும் தமது உடன் பிறப்பாளராக வாய்க்கப்பெற்றார் இவர்கள் மூவரும் முத் தமிழ்போல் – முக்கனிபோல் வளருங்காலை மிக இளமைப் பருவத் திலேயே தாயை இழந்தனர். எனினும் இவர்களது தந்தையாரி னதும், பேத்தியாரினதும் அன்பு அரவணைப்பால் வாழ்ந்து வந் தார்கள்.

**கல்வி:–** இவர் தமது ஆரம்பக் கல்வியைச் சித்தன்கேணி கணேச வித்தியாசாலையிலும் பயின்றார். இவர் சைவ நெறியிலும், தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகியவற்றிலும் சிறந்த அறிவுடையவராக விளங்கினர். பின்னர் "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற ஔவை வாக்கிற்கிணங்க தம் பதினெட்டாம் வயதில் (1922 ல்) மலேசியா சென்றார். மலேசியாவில் இவரது சிறியதந்தை அமரர் சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை அவர்கள் இவரது அறிவு ஆற்றலை நன்கறிந்தவராய் இவரை மலாய் – சீனமொழி கற்கவும் ஆங்கில அறிவைப் பெருக்கவும் எண்ணி மலேசியாவிலுள்ள "ஆங்லோ சைனிஸ் ஸ்கூலில்" ( Anglo Chinese School ) கல்வி கற்க வைத்தார். பின்னர் மலேசியா தெலிகென்ஷன் றபர் ஸ்டேட் டில் ( Telekenson Rubber Estate ) குமாஸ்தாவாக நியமனம் பெற உதவிசெய்தார். இவரது அறிவாற்றல், நேர்மை, கண்ணியம் முதலிய குணச்சிறப்புகளை அறிந்தவரான பேரா மாநிலத்தில் உள்ள சுங்கை காப்பி எஸ்டேட் ( Sungai Gapi Estate ) முகாமைப் பணிப்பாளர் இவருக்கு பிரதம குமாஸ்தாவாக ( Chief Clerk ) நியமனம் வழங்கி தம் எஸ்டேட்டில் பணியாற்றச் செய்தார். லெஜிஸ்லேற்றிவ் அன்ட் எக்லிகியூற்றிவ் ( Lgislative & Excutive Chairman ) தலைவரும், பொதுச் செயலாளர் திரு V. M N. மேனன் அவர்கள் மலேசியா சென்றபொழுது அவரது பிரதம ஆலோசகராகவும் வழிகாட்டியாகவும் விளங்கினர்.

**திருமணம்:–** இவ்வேளை இல்லறத்தில் வாழ்ந்து நல்லறம் புரிதல் தமிழர் தம் தனி நெறியாகும். இதனை உணர்ந்த இவரது தந்தையும் சிறிய தந்தையாரும் இணைந்து சித்தன்கேணியூரைச் சேர்ந்த பரம

நாதன் சேதுநாதர் வழிவந்த நாராயணர், சின்னத்தம்பி, நாகமுத்து வயிரவநாதர் மூத்தமகள் சேதுப்பிள்ளையை 1936ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26ம் நாளில் (26-08-1936) கடிமணம் செய்துவைத்தார்கள்.

"வாழ்வில் பொன்னுடையரேனும், புகழுடையரேனும் மற்றுஎன்ன உடையரேனும்" பொன்போல் புதல்வர் பெறாராயின் அவ்வாழ்வு நீரில்லாத்தடாகம் போலாகும் பிள்ளைகளைப் பெறுதல் அதுவும் அறிவறிந்த மக்களைப் பெறுதல் உலகில் பெறற்கரிய காரியமாகும் இதனால்தான் வள்ளுவம் 'தம் பொருள் என்பதம் மக்கள்" என்றார். இவர்களின் தவப்பயனாக கல்லைநாதன், பேரின்பநாயகி, ஆனந்தராசா, ஆனந்தக்குமாரசாமி, நாகேஸ்வரி சற்குணதேவி, பாலசுப்பிரமணியம் எனும் எழு செல்வங்களைப் பெற்றார்கள். இவர்களில் முதல் அறுவரும் மலேசியாவிலும் இளையவரான பாலசுப்பிரமணியம் ஈழமணித் திருநாட்டிலும் பிறந்தார்கள். இவர்கள் ஆறு செல்வங்களைப் பெற்றபோதிலும் மலேசியாவில் வாழ்ந்தகாலை முகமது அலி எனும் மலாய்ச் சிறுவனை தத்துப்பண்ணி வளர்த்தார். இச் சிறுவனை B. A. பரீட்சையில் தமிழ் பாடத்தில் நானசித்தி (B. A. Honsintamil) பெறவும் செய்தார். இவரே இன்று மலேசிய ஒலிபரப்புக் கழக தமிழ்ப் பிரிவின் பணிப்பாளராக விளங்குகின்றார்.

திரு. நடாராசா அவர்கள் தமிழ் ஆங்கில தட்டச்சாளராகவும் விளங்கினார். 2ம் உலகமகாயுத்தத்தின் போது தம்பிடரியில் துப்பாக்கிச்சூடு ஏற்பட்டும், அதைப்பொருட்படுத்தாது அனைத்து மக்களுக்கும் தகுந்த பாதுகாப்பும், உணவு, உடை, தங்குமிடவசதிகளையும் செய்து கொடுத்தார். இதனால் அவ்வூரில் உள்ளோர் இவரைப் பெரிதும் போற்றி வருகிறார்கள். 1949ல் தாயகம் திரும்பிய இவர் ஈர்பத்து மாதங்களில் தம் துணைவியாரை இழந்தார் இதனால் இவர் மீண்டும் மலேசியா செல்ல விரும்பாது மட்டக்களப்பில் "சாருகூலு" எஸ்டேட்டில் பணியாற்றினார். பின் தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, அவ் வேலையில் நின்றும் விலகி யாழ் "இப்ருகிம்யபேர்ஜி" (Ibrahim Jaffefee) பணியாற்றினார். பின்னர் தமது ஓய்வுக் காலத்தில் வட்டுக்கிழக்கு பயிர்செய்கைக் குழுவின் செயலாளராகவும் மிக நீண்டகாலம் பணியாற்றி இவ்வூர் விவசாயிகளின் நலனுக்காக பல தொண்டாற்றினார்.

இவர் அரசியலிலும் மிகுந்த ஆர்வம் உடையவராக விளங்கினார். மிகநீண்டகாலமாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வட்டுக்கோட்டை மாவட்டக் கிளைச் செயலாளராக விளங்கினார். இவ்வேளையில் கட்சியின் போராட்டங்களில் முழுமனதோடு கலந்து கொண்டு மற்றையோரையும் பங்குபற்றச் செய்தார். இவர் பங்கு பற்றிய போராட்டங்களிற் சில:-

1) 1956ம் ஆண்டு சிறீ எதிர்ப்பு போராட்டம்.

2) 1961ம் ஆண்டு மொழி உரிமை மறியல் போராட்டம்.

3) 1963 தீண்டாமை ஒழிப்புப் பாதயாத்திரை ஒடி ஆண்டு எல்லாம் தமிழ் இயக்க வாரம்.

சகல செல்வங்களும் சீரும் சிறப்பும் பெற்று, மக்கள் புகழுடன் வாழ்ந்த தலைவணங்காத் தலைவனை மேலும் வருத்தாமலும் இறக்குமுன் எவருக்கும் தலைவணங்கவிட விரும்பாத வளாகிய அன்னை நயினை சிறீ நாகபூஷணி அம்பாள் 8-6-86 அன்று பூர்வபட்சத்துப் பிரதமைத் திதியும் மிருகசீரிட நட்சத்திரமும் கூடிய நன்னாளில் இவரைத் தன்னடியில் சேர்த்துக் கொண்டாள். இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வேட்கை கொண்ட பெரியார்

திரு ச. வி. நடராசா ஐயா அவர்கள் இன்று எம்மோடு இல்லை. பிரிவு ஒரு மாதகால இடைவெளியை அடைகிறது. காலவெள்ளம் எதையும் பொருட்படுத்தாது மேலும் உருண்டோடவே செய்யும். எனினும் நினைவுகள் இருக்கின்றனவே. அவை நீர் வீழ்ச்சியின் நடுவே நிமிர்ந்து நிற்கும் கருங்கற் பாறை போலவும் வாழ்வதுண்டு. அத்தகைய பழைய நினைவுகள் எம் ஐயாவை எண்ணும் போது நெஞ்சத்துள் எழுகின்றன.

அது கால் நூற்றாண்டுக்கு முன்னைய காலம். ஈழத்தமிழரின் சுதந்திரப் போராட்டத்திலே தந்தை செல்வா அவர்கள் கட்டியெழுப்பிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகம் அவ்வேளை யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் இருந்தது. அங்கு தலைவர்கள் அத்தனை பேரும் வருவார்கள். இடையறாதியங்கும் செயலர் திரு அ. அமிர்தலிங்கம் அவர்களும் வட்டுக்கோட்டையிலிருந்து வருவார். ஆனால் தனித்து அல்ல. தனயனைக் கூட்டி வரும் தந்தையைப் போல எமது நடராசா ஐயா அவர்களும் கூடவே வருவார். அவ்வேளை இளைஞனாயிருந்த அத்தலைவனை உருவாக்கியவர்களில் இப்பெரியாரும் ஒருவர். தொகுதிக் கிளையின் செயலாளராயிருந்து நீண்ட காலம் இவர் அரும்பணி ஆற்றிய பெருமகனாவார். அரசியல் உணர்வே இவரது உள்ளத்தினுள்ளே இயங்கிக் கொண்டிருந்த உணர்வு.

சுதந்திர வேட்கையே அவரது மூச்சாக இருந்தது. அவர் எதிர்ப்புக்களையோ இடர்களையோ பொருட்படுத்தாத அஞ்சா நெஞ்சன். போராட்டக் களங்கள் எதிலும் அந்நாட்களில் அவரைக் காணலாம். வட்டுக்கோட்டைத் தொகுதியின் பெரியார்கள் வன்னியசிங்கம் முத்தையாபிள்ளை, தையல்பாகர், இலகுப்பிள்ளை ஆகிய பலரின் அவ்வேளைப் பங்கும் நினைவில் எழுகிறது. இவ்விதமானோர் களத்தின் வெளியே நின்று பேசவில்லை உள்ளே குதித்து இயங்கினார்கள்.

அமரர் நடராசா அவர்கள் தமது நிறைவாழ்வில் 1922லிருந்து 1946 வரை மலேசியாவில் செயலாற்றியதை அறிகிறோம். அங்கும் பிற்காலத்தில் வங்கத்தின் சிங்கம் சுபாஸ் சந்திரபோஸ் அவர்களது நெருங்கிய தொடர்பு இவர்களுக்கு கிடைத்திருக்கிறது. அமரரின் வாழ்க்கையே இதுதானே? உள்ளூரிலும் பயிர்ச் செய்கைக் குழு முதலியவற்றில் இவர் நீண்டகாலம் தம் பங்கைச் செலுத்தினார்.

82 வருடம் நிறைவாழ்வும் முழு வாழ்வும் வாழ்ந்த அன்னாருக்கு எம் சிரம் தாழ்ந்த அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் ஆன்மா சாந்தி பெற வேண்டுகிறோம். அவரது அருமைப் பிள்ளைகளுக்கும் உறவினருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

2-6-86
சித்தங்கேணி

அன்பன்
நாக. பத்மநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோவின், நோதலும்
# நொந்தாரைக் கண்டு நோதலும்

அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழார் வலர்
புன் கணீர் பூசல் தரும் என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய

அமரரவர்கள் தன் வாழ்க்கையில் பிறர் பணி புரிதலும் பிறர் துயர்
கண்டு நோதலும், தன்னால் இயன்ற பணிகளை 'என் கடன் பணி
செய்து கிடப்பதே'' என்பதற் கமைய வாழ்க்கையை நடாத்தினர்.
தான் நொந்து நோய் வாய்ப்பட்ட காலத்திலும் நொந்தாரைக் கண்டு
நோதலாகவே இருந்தார்.

அமரரின் ஆத்மா சாந்திக்காக கீழ்க்காணும் செய்யுளை இங்கு
நினைவு கூறுவோம்:-

அந்த நாள் வந்திலை யருந் தமிழ் புலவோய்
இந்த நாள் வந்து நீ நொந்தெனை யடைந்தாய்
நல்லதோர் கொடு போய்த் தம்பி கைக்கொடுத்தன்
விலைதனை பெற்றுன் வெறுமை நோய்களையே.

இச் செய்யுளிற் முதலடி இரண்டும் நொந்தாரைக் கண்டு நொந்து
கூறியது. ஏற்ற இரண்டும் ஒண் பொருள் கொடுத்தல்

ஒருவர் விரும்பக் கூடிய உயர்ந்த சிறப்புடைய பொருள் அன்பும்
அருளும் அறனுமாம்:

வேண்டும் வேண்டும் மெய்யடியாருள்ளே
விரும்பி எனையருளால் ஆண்டாய் அடியேன் இடர் களைந்த
அமுதே அருமாமணி முத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய் தொண்டனேற்கும்
உண்டாங் கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே. (திருவாசகம்)

சாந்தி!

ஓர் அன்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தாத்தா

தத்தித் தவள, முத்தம் கொடுத்துக், கொஞ்சிக்குலாவி, பொத்தித் தருவார் பொரிகடலை. இனிப்புகள் எங்கள் அன்புத் தாத்தா. அப்புலிக் கதைசொல்லி "அம்மா சொல் கேள்" என்பார் எங்கள் அருமைத் தாத்தா.

நிமிர்ந்தநடையும் நேர்கொண்ட பார்வையும் மலர்ந்தமுகமும் ஆழ்ந்த அறிவும், ஒருங்கே அமையப்பெற்றவர். எங்கள் தாத்தா 'பிள்ளை பிள்ளை' என்ற கனிவான பேச்சு இன்னும் எம் உள்ளத்தை விட்டு நீங்கவில்லை. தான் இருக்கும் இடத்தைச் சுற்றிப் பேரப்பிள்ளைகளைக் கவர்ந்திழுக்கும் காந்த சக்தி கொண்டவர் அவர். 'இல்லை', என்னும் சொல்லை இல்லாமற் செய்தவரே எங்கள் கண்ணாடித்தாத்தா எமக்கு எது தேவையானாலும் கொஞ்சிக்குலாவிவிட்டு குழந்தைபோல அள்ளித் தந்திடுவார் அனைத்தையுமே பசுமரத்தாணி போல், பலபுத்தி மதிகளையும் எம்மனதில் பதியவைத்தார்.

"கற்க கசடறக் கற்றவை கற்றன்பின்
நிற்க அதற்கு தக"

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

எனும் வாக்குகளுக்கிணங்க அவருடைய அழியாத செல்வம் கல்வியே தனது பேரப்பிள்ளைகள் ஒவ்வொருவரும். படித்துப் பட்டம் பெறவேண்டும் என்றே விரும்பினார். எங்கள் கல்வி வளர்ச்சியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார் "படி படி நல்லாய்ப் படி" என்றே கூறுவார் ஆனால் அதை மூடி மூடி என்று கூறமறுத்திடுவார்.

மலேசியா புதினங்களை மழை போல் சொல்லுவார். அத்துடன் உலகவிஷயங்களையும் எமக்கு புகுத்த மறக்க மாட்டார். நாம் எந்தப் போட்டி நிகழ்ச்சிக்குப் போனாலும். "சென்றுவா வென்றுவா" என்று தெய்வவாக்குக் கொடுப்பார். இனி இவற்றையெல்லாம், நாம் எங்கு எதிர்பார்ப்பது.

சத்தான கனிகளையும், சரக்குகளையும் தேடித்தந்துவிட்டு. சத்தம் போடாமலே போய்விட்டார். இரவென்றும் பாராமல், எங்களைத் தேடி ஓடிவரும் தாத்தா அன்று ஏன் தான் வரமறந்தாரோ? உலகின் கண்களுக்கு அவர் மறைந்தாலும், எங்கள் கண்களுக்கு அவர் மறையவில்லை. எம் உயிர் உள்ளவரை, அவரது புத்திமதிகளையே பின்பற்றி நடப்போம். அந்தப்பசுமையான நினைவிலேயே, என்றென்றும் வாழ்வோம். அவர் காட்டிய வழியில் வீறுநடை போடுவோம். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்புப் பேரப்பிள்ளைகள்

ரதீவதனி (ஆசிரியை B. A.)
மஞ்சுளா (ஆசிரியை)
சுமங்கலி

அகிலன்
மைதிலி (ஆசிரியை)
அரவிந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் எவர் நல்லார்
செத்தால் வந் துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டன் கொண்டடியேன் என்செய்கேனே.

## திருவாசகம்

கண்களிரண்டும் வனகழல் கண்டுகளிப்பனவா - காதே
காரிகையார்கள் வாழ்விலென்வாழ்வு கடைப்படுமா - காதே
மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடுமா - காதே
மா - லறியா மலர்பா - தமிரண்டும் வணங்குவதுமா - காதே
கண்களிகூர் தரு பாடலொடாடல் பயின்றிடுமா - காதே
பாண்டி நன்னாடுடையான் படையாட்கள் பாடுதுமா - காதே
விண்களிகூர்வதோர் வேதகமும் வந்து வெளிப்படுமா - காதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படுமாயிடுமே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக்கனியைக் கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர்புரங்கள் செற்றவெஞ்சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்றன்னைக் கண்டுகண்டுள்ளங் குளிரவென்கண்
குளிர்ந்தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீ
ழாரும் பெருதறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவா ருலகி
லூரு முலகுங் கழற வுழறி யுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவு மாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியாய் வேடமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

திமிர வுததி யனைய நரக ஜெனன மதனில் விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு சிறிது மிடிவு மணுகாதே
அமர வடிவு மதிக குலமு மறிவு நிறையும் வரவே நின்
அருள தருளி எனையு மனதோ டடிமை கொளவும் வரவேணும்
சமர முகவே லசுரர் தமது தலைக ளுருள மிகவேநீள்
ஜலதி யலற நெடிய பதலை தகர அயிலை விடுவோனே
வெமர அணையி லினிது துயிலும் விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரிய குமர பழனி விரவும மாப் பெருமானே.

## பட்டினத்தார் பாடல்

பெற்றதாய்தனை மகமறந் தாலும்
பிள்ளையைப் பெறுந்தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை யுயிர்மறந் தாலும்
உயிரை மேவிய வுடல்மறந் தாலும்
கற்ற நெஞ்சகங் கலைமறந் தாலும்
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவ ருள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான் மறவேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டைக்காடு இராசவல்லவன்முதலி வம்சாவழி

## பிதாவழி

இராசவல்லவன்முதலி தனியசிங்கம்முதலி வழிவருபுன்னர் சிவலிங்கம்

சங்கரப்பிள்ளை மணந்தது சித்தனசேனி தாமோதரப்பிள்ளை கதிராசிட்டபிள்ளை

சிவலிங்கம் நடராசா மணந்தது வயிரவநாதர் மகள் சேதுப்பிள்ளை (சீதாதேவி)

| பிள்ளைகள் | பேரப்பிள்ளைகள் |
|---|---|
| சங்கைநாதன் – கமலாதேவி | திரிலோகநாதன், ஜெயலக்ஷமி, சிவசுதன், ஞானலக்ஷமி, சுஜாதரன் |
| பேரின்பநாயகி – சுப்பிரமணியம் | ரதிவதனி, அகிலன், மஞ்சுளா, மைதிலி, சுமங்கலி, [illegible] |
| ஆனந்தராசா – சுசீலா | சியாமளா, ரசிகலா, ஹம்சலா, லாவண்யா, சிறீமகாகோணேஷ் |
| ஆனந்தகுமாரசாமி – சுசீலா | ஆனந்திலா, கிரோஷன் |
| நாகேஸ்வரி – அமலநாதன் | குமரன், கிரஞ்ஜலா, ரமணன் |
| சற்குணதேவி – சின்னத்துரை | சஞ்ஜே |
| பாலசுப்பிரமணியம் – மகேந்திரம் | தேவதுளசி, தேவதர்ஷனி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்.

எங்கள் அன்புத் தெய்வம் மறைந்த செய்தி கேட்டு ஆருந்துயரில் ஆழ்ந்த அனைவருக்கும், இறுதிக் கிரியைகளின் போது நேரில் கலந்து கொண்டோருக்கும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை, இல்லக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போருக்கும் இம்மலரை அழகுற அச்சிட்டு உதவிய திருமொழி அச்சகத்தினருக்கும் எம் உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்
அன்புக்கும் நன்றிக்குமுரிய
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

திருமொழி அச்சகம், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org